# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,508 – 1965 සැප්තැම්බර් 17 වැනි සිකුරාදා – 1965.9.17

14,508 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 480 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 479 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


**கவனிக்க.**—1963, சனவரி முதல் யூன் வரையுள்ள காலத்திற்கு இலங்கை அரசாங்க வர்த்தமானியின் அட்டவணை இலக்கங்கள் 13,457 தொடக்கம் 13,690 வரை அனுபந்தமாக இநத இதழில் கொடுக்கபபடடுள்ளது.

## அரசாங்க அறிவித்தல்கள்

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

பளிச்சொளி பற்றறிகளினதும், ட்ரன்சிஸ்ரர் றேடியோ பற்றறிகளினதும் விலை சம்பந்தமாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியினால் (நானாவித பொருட்கள்) ஆக்கப்பட்டு, 1965, ஜூலை 16 ந் திகதிய 14,453 ஆம் இலக்க அதி விசேட அரசாங்க வர்த்தமானியிற பிரசுரிக்கப்பட்ட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரிததுள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டததின் 4 (7) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ரீ. ஈ. ஏ. த. பொன்சேகா,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965, செப்டம்பர் 2 ந் திகதி.

9–563.

---

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

மின்சார பல்புகளின் விலை சம்பந்தமாக, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியினால் (நானாவித பொருட்கள்) ஆக்கப்பட்டு, 1965, ஆகஸ்ட் 2 ந் திகதிய 14,469 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கபபடட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைககட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ரீ. ஈ. ஏ. த. பொன்சேகா,
நிரந்தரக் காரியதரிசி,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965, செப்டம்பர் 2 ந் திகதி.

9–562.

---

### 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம்

பிரிவு 38 ஆ (1) ன் கீழான கட்டளை

1964 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1961 ம் ஆண்டின் 61 ம் இலக்கச் சட்டத்தினாலும், 1958 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற் காணிச் சட்டத்தின் 38 ஆ பிரிவின் (1) ம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழிற் சேவை ஆணையாளர், யோசெப வெலன்றைன் பொன்சேகா ஆகிய நான் குருநாகல் மாவட்டத்திலுள்ள டம்படெனிய கத்பத்தில் அமைந்திருக்கும் மீவெவ பயிர்ச்செய்கைக் குழுவின் துர்நடத்தை பற்றி போதிய அத்தாட்சியுள்ளதெனத் திருப்தியடைந்ததன் பேரில் சொல்லப்பட்ட பயிர்ச்செய்கைக் குழுவை இக்கட்டளையினால் குலைக்கின்றேன்.

கமத்தொழில் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு செப்றெம்பர் மீ 8 ந் உ.

9–663

L.D.—B. 80/44

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 20 ம், 24 ம், 25 ம் பிரிவுகளின் பிரகாரம் புகையிலைத் தொழிற் சம்பளச் சபைக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப் பட்ட தீர்மானங்களை இச்சபை செய்ய உத்தேசித்திருக்கிறதென அச்சட்டத் தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

உத்தேசித்துள்ள தீர்மானங்களுக்கு ஆட்சேபனைகள் 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் தேதி பகல் 12 மணி வரைக்கும் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப் படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

என். எல். அபேவீர,
புகையிலைத்தொழிற் சம்பளச்
சபைத் தலைவர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 2 ந் தேதி.

### அட்டவணை

### I ம் பாகம்

(ஒரு சாப்பாட்டுக்கு அல்லது ஓய்வுக்கு ஒரு மணிநேரம் உட்பட) சாதாரண வேலை நாட்கொண்ட மணிநேரம் ஒன்பதாகும்

### II ம் பாகம்

இதனகத்தேயுள்ள (I) ம் பத்தியிற் குறிக்கப்பட்ட தொழிலாளருக்கு நேர வேலைக்கு இயைபுடைய கீழெல்லைச் சம்பள வீதங்கள் (II) ம் பத்தியில் அவ்வினங்களுக்கெதிரே குறிக்கப்பட்ட வீதங்களாகும்.

| (I) ம் பத்தி<br>வேலையாளரின் இனம் | (II) ம் பத்தி<br>ஒரு சாதாரண வேலைநாளுக் குரிய சம்பள விகிதம்<br>ரூ. ச. |
|---|---|
| (அ) 16 வயதுக்குட்படாத ஆண் தொழிலாளர் .. | 3 30 |
| (ஆ) 15 வயதுக்குட்படாத பெண் தொழிலாளர் .. | 3 00 |
| (இ) பிள்ளைத்தொழிலாளர் .. | 2 50 |

முற்போந்த தீர்மானங்களில் "பிள்ளைத்தொழிலாளர்" என்பது 16 வயதுக்குட்பட்ட ஆண் தொழிலாளரென அல்லது 15 வயதுக்குட்பட்ட பெண் தொழிலாளரெனப் பொருள்படும்.

### III ம் பாகம்

### மேலதிக நேரவீதங்கள்

சாதாரண வேலைநாளுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்குமுள்ள கீழெல்லை மேலதிக நேரவீதம் (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆற் பிரிக்க வரும்) கீழெல்லை மணிநேர வீதத்தை—

(அ) அத்தகைய வேலை காலை 7 மணிக்கும் மாலை 7 மணிக்குமிடையிற் செய்யப்படுமிடத்து, நூற்றுக்கு 25 வீதமும் ;

(ஆ) அத்தகைய வேலை மாலை 7 மணிக்கும் காலை 7 மணிக்குமிடையிற் செய்யப்படுமிடத்து, நூற்றுக்கு 50 வீதமும் அதிகரிக்க வரும் தொகையாகும்.

மேலதிக நேரவீதத்தைக் கணிக்கும் விடயத்தில்—

(1) அரைச் சதத்திற்குட்பட்ட ஒரு சதத்தின் பின்னம் கணக்கிடப்பட லாகாது ;

(2) அரைச்சதம் இரட்டையெண் விதியின்படி அதாவது மிகக்கிட்டிய இரட்டையெண்வரை கணிக்கப்படுதல் வேண்டும் ;

(3) அரைச்சதத்திற்கு மேற்பட்ட ஒரு சதத்தின் பின்னம் ஒரு சதமாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

### IV ம் பாகம்

### வாராந்தர விடுமுறை (24 ம் பிரிவு)

ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் தொழிலாளர் யாவருக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையையும் வாராந்தர விடுமுறை யாகக் கொடுத்தல் வேண்டும். ஆயினும், முதலாளியொருவர், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று எத் தொழிலாளருக்கும் வேலை கொடுக்கலாம்—

(1) அத்தகைய ஞாயிற்றுக்கிழமைக்கு நேரடுத்துவரும் ஆறு நாட் களுள் ஒரு நாள் அத்தொழிலாளருக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ;

(2) அத்தகைய ஞாயிற்றுக்கிழமையில் செய்யும் வேலைக்கு—

(அ) (ஒரு சாப்பாட்டுக்கு அல்லது ஓய்வுக்கு ஒருமணி நேரமுட்பட) 9 மணி நேரத்திற்கு அல்லது முதலாளி வேலை கொடுக்கத்தவறிய காரணத்தால் ஒன்பது மணி நேரத்திற்குக் குறைவான எக் காலத்திற்கும் தொழிலாளரொருவர் வேலை செய்திருப்பின், ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்தின் 1½ மடங்குச் சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வேலை செய்ய விரும்பாமை காரணத்தால் (ஒரு சாப்பாட்டுக்கு அல்லது ஓய்வுக்கு ஒரு மணிநேரமுட்பட) 9 மணி நேரத்திற்குக் குறைவாகத் தொழிலாளர் ஒருவர் வேலை செய்திருப்பின், அவர் வேலை செய்த ஒவ்வொரு மணிநேரத்திற்கும் (ஒரு சாதாரண வேலைநாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்தை 8 ஆற் பிரிக்க வரும்) மணிநேர வீதத்தின் 1½ மடங்குச் சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) (ஒரு சாப்பாட்டுக்கு அல்லது ஓய்வுக்கு ஒரு மணிநேரமுட்பட) 9 மணிநேரத்திற்கு மேற்படத் தொழிலாளரொருவர் வேலை செய்திருப்பின், 9 மணிநேரத்திற்கு மேற்பட அவர் வேலை செய்த ஒவ்வொரு மணிநேரவேலைக்கும் (ஒரு சாதாரணவேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) மணிநேர வீதத்தின் இரு மடங்குச் சம்பளம் அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) எக்காலத்திலாயினும் வாராந்தர விடுமுறையிற் செய்த வேலைக்கு ஒரு தொழிலாளருக்குரிய வேதனம் சம்பளச் சபைச் சட்டத்தின் 2(ஆ) ம் பிரிவின்படி அத்தகைய காலத்திற்குச் சம்பளம் கொடுத்தற்கு விதிக்கப்பட்ட காலத்திற்குள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

9-560.

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1961 ம் ஆண்டின் 33 ம் இலக்க விவசாய உற்பத்திப் பொருள் சட்டம் (உத்தரவாத விலையும், நெல் குற்றுதல் கட்டுப்பாடும்) 3 ம் பிரிவின் கீழ் இடப்பட்ட கட்டளை

30.7.1965 ம் திகதிய 14,464 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 20.7.1965 ம் திகதிய அறிவித்தலுடன் கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் கொடுக்கப்படும் உத்தரவாத விலைகள், சின்னவெண் காயத்திற்கு, தை, ஆனி ஆகிய மாதங்களுககு பின்வருமாறு திருத்தப் பட்டுள்ளன.

| | இருத்தல் ஒன்றுக்கு<br>ரூ. ச. | | அந்தர் ஒன்றுக்கு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| தை .. | 0 31 | .. | 34 72 |
| வைகாசியும் ஆனியும் .. | 0 28 | .. | 31 36 |

ஜே. வி. பொன்சேகா,
கமத்தொழில் சேவை அதிகாரி.

கொழும்பு 7,
1965 ம் ஆப செப்டம்பர் மீ 4 ந் உ.

9-549.

## தோட்ட வீதிகளைப் பொது வீதிகளாக்கும் சட்டம்
## (சட்ட நிரூபணங்களின் 196 ம் அத்தியாயம்)

கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் ஹபுதந்திரிகே லீலாரத்ன குணசேகர ஆகிய நான் தோட்ட வீதிகளைப் பொது வீதிகளாக்கும் சட்டத்து 2 ம் பிரிவின் பிரகாரம் எனக்கு அளித்த அதிகாரங்களின்படி இத்தால் பிரகடனப்படுத்துவது யாதெனில் :—

எ) 1. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் ஏ. பி. சி. என்னும் மாதிரிப் படங்களைக் கொண்ட அட்டவணையின் பிரகாரம் கறந்துபொன-எபலாவ தோட்ட வீதியைப் பொது வீதியாகவும்,

2. இந்த வீதியின் மத்தியிலிருந்து 25 அடிகளை இவ் வீதியை விஸ்தரிப்பது போன்ற வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும்,


(பி) இக்கட்டளையால் பாதிக்கப்பட்ட உரித்தாளி அல்லது உரித்தாளிகள் தான் இந்த தோட்ட வீதியை பந்தி (எ) இல் கூறியபடி பாதுகாக்கும் பொறுப்பும் இவர்களைச் சார்ந்ததென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

H. L. குணசேகர,
கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, கேகாலை,
1965 ம் ஆு மாச்சு மீ 22 ந் உ.

### அட்டவணை

கொழும்பு—கண்டி அரசாங்க பகிரங்க வேலைப் பகுதி வீதி 52/1 மதகடியில் இருந்து பிரிந்து அஸ்மடல—கல்அத்தற கிராமச் சங்க வீதியைத் தொடுக்கும் கறந்துபொன—எபலாவ தோட்டங்களுக்குள் அடங்கும் 6 மைல் நீளமுள்ள தோட்ட வீதி.



*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை வாழைச்சேனை, ஈஸரேனை பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.